3 4/

# ஆர்ய வைசியாபிமானி

தொகுதி-1 எண்-1

ஏப்ரல் 1915

C

JL
m2116,N15AV
N15
169986

341

Registered No

ஓம்.

# ஆர்ய வைசியாபிமானி



OFFICE OF THE RE… 3 -… 1915 MADRAS.

# Arya Vaisiabhimani.

சீரிய நற் செந்தமிழால் தேர்ந்து வெளியிட்டேன்.
"ஆர்ய வைசியாபிமானி" யென்றுய—பேரியலும்
பத்திரிகைப் பாங்காய்ப் பயின்றவர்க்கண்பாரீர்,
உத்தம குலத்திர் உவந்து.


| | | |
|---|---|---|
| Vol I. | **April 1915.** | No.1 |
| தொகுதி 1. | ராக்ஷஸ-வரு சித்திரை-மீ | பகுதி 1 |



1. பத்திரிக்கைகளின் உபயோகங்கள்.
2. மகன் மனைவி யிருக்கவேண்டிய முறை.
3. சேலம்வைசிய மாணுக்கர்களின் சங்கம்.
4. சென்னையில் நடை பெற்ற **B. A.** பட்ட பரிசைக்ஷயில் தேர்ந்த வைசியர்களின் சங்கம்.
5. விஞ்ஞாபனம்.
6. காலஞ்சென்ற ஹானரபிள் கோகலே யவர்கள் பேரில் இரங்கற்பாக்கள்.
7. பங்குனி உத்திர உற்சவ சிறப்பு.



"PRINTED AT THE VYSIABIMANI" PRESS,
& PUBLISHED BY 'ARYA VYSYABIMANI' OFFICE,
SHEVAPET. SALEM.

உ. 3/94

OFFICE OF THE REGISTRAR
3 - MAY 1915
MADRAS.

ஸ்ரீ.கன்னிகாபரமேஸ்வரி யம்மன் துணை

# பத்திரிக்கைகளின் உபயோகங்கள்.

நிலமகட்கினிய முகமெனவிளங்கும் இப்பரதகண்டம் நாகரீகத்திலும், கல்வியிலும், செல்வத்திலும், முதிர்ச்சிப்பெற்று தெய்வபக்தி, இராஜபக்தி, பரோபகாரம், முதலிய நல்லொழுக்கங்களில் சிறந்து விளங்கியதென்றாலும் நமது அன்புள்ள ஆங்கிலேயர்கள் இன்னாட்டைக் கைப்பற்றுவதற்கு முன் சிற்சில துஷ்ட சிற்றரசர்களால் ஆளப்பட்டு சிறிதும் சமாதானமின்றி குழப்பம் மிகுந்து சீர்குலைந்துபோன பல சிற்றரசர்களின் கொடுங்கோலுக்கு ஆட்பட்டு பல துன்பங்களடைந்து, மனிதர்களுக்குக்கண்போன்றதான கல்விப்பொருளையும், நம் மதாசாரக்கொள்கையையும் நாம் அநேகமாய்க்கையிழந்து விட்டிருக்கின்றனம். தற்காலம் நாகரீகம் கீர்த்திபெற்று, செங்கோல் வழுவாது, அரசு செலுத்திவரும் நமது ஆங்கிலேயர்கள் நம்மவர்களுக்கு வேண்டிய சுதந்திரங்களைக் கொடுத்திருந்தும், நாம் கையிழந்த மேற்கூறிய பொருள்களைக்கைப்பற்ற முயலாதிருத்தல் நம்மறிவீனமாகுமன்றோ?

தற்காலம் நாகரீகத்திலும் செல்வத்திலும் சிறந்துவிளங்கும் இங்கிலாந்து, அமெரிகா ஜப்பான் முதலிய தேசங்களைப்போல் நமது தேசமும் சிறந்து விளங்க வேண்டுமானால் நாம் அயல்நாட்டுச்சமாச்சாரங்களை கவனித்து அத்தேசத்தவர்கள் கல்வியை அபிவிருத்தி செய்யும் விதத்தையும் கவனித்தறிதல் அவசியம். அன்றியும் நம் சமய நூல்களை பரவச்செய்து மதாசாரக்கொள்கைகளை ஒவ்வொருவரும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தாய்பாஷையை விருத்தி செய்யும் பொருட்டு, கிழ்தர பாடசாலைகளை அதிகப்படுத்தல் வேண்டும். ஆகையால் மேற்கூறியபடி அயல்நாட்டில் நடக்கும் விஷயங்களை அதிகசீக்கிரமாகவும், தெளிவாகவும், நமது நேரில் நடக்குமவைகளைப்போல் தெரிவிப்பது

சமாசாரப்பத்திரிகைகளே நமது மதாசாரக் கொள்கைகளையும் அவற்றை அனுஷ்டானத்திற்கு கொண்டுவர வேண்டிய அவசியத்தையும் பலகாலும் எடுத்துக்கூறுவது பத்திரிக்கைகளே யிருந்த அனுபவமும் ஆழ்ந்த கல்வியறிவுள்ள பத்திராசிரியர்கள் பல மஹான்களால் எழுதப்பட்ட அருமையான செய்யுட்களில் பதிந்துள்ள விஷயங்களை சுலபப்படிப்புள்ளவர்களும் தெரிந்துகொள்ளும்படி விவரித்து எழுதுகிறார்களன்றோ. அன்றியும் கைத்தொழில் அபிவிருத்தியாவதற்கு இப்பத்திரிக்கைகளே சிறந்த சாதகமெனக்கூறலாம். எவ்வாறெனில் ஒரு ஊரில் எவரேனும் அபூர்வமான விஷயத்தைக்கண்டுபிடித்தாலும் கைத்தொழிற்சாலை ஏற்படுத்தினாலும் நமக்கு உடனே அறிவிப்பது பத்திரிக்கைகளேயாம் அன்றியும் கைத்தொழிலால் ஒவ்வொருவரும் அடையும்பயனையும் அதன் அவசியத்தையும் கைத்தொழிலால சிறந்துவிளங்கும் தேசத்தின் வரலாற்றையும் தெளிவாய்க்கூறுகின்றது. வியாபாரத்திற்கும், இப்பத்திரிக்கைகள், இன்றியமையாததெனக்கூறலாம் உதாரணமாகவியாபாரசங்கத்தார்கள் கவனிக்கவேண்டிய முக்கியமானபலவிஷயங்களையும் கூறுகின்றது அன்றியும்வியாபாரப் பெருக்கத்தைவிரும்பும்ஒவ்வொருவரும் தங்கள்ஊரிலுள்ளபல வர்த்தகர்களும் ஒழுங்கு சேர்ந்து அப்போதைய வியாபாரநிலைமையும் அதற்க்காக கவனிக்கவேண்டிய பலஒழுக்கங்களையும் பற்றிப் பேசவேண்டியது அவசியம் என்றவற்புறுத்திக்கூறி இருப்பதைப்பலபத்திரிக்கைகளிலும் பார்க்கக்காணலாம்.

நமதுஇராஜாங்கத்தாருடைய எண்ணங்களை குடிகளுக்கு தெரிவிப்பதற்காக துரைத்தனத்தாரால் முதல் முதல் பத்திரிக்கை வெளியிடப்பட்டது இருப்பினும் தற்காலம் பலபத்திரிக்கைகள் அநேகம்பெயர்களுடன் வெளிவந்திருக்கின்றன இவைகள் துரைத்தனத்தாருக்கும் குடிகளுக்குமுள்ள பலவித சம்பந்த[illegible] எடுத்துக்காட்டுவதுடன், மேற்கூறிய பலநன்மைகளை [illegible] செய்வதால் பத்திரிக்கைகளை விரும்பாதவர்களும் உலகில் [illegible] பத்திரிக்கைகளின் பயனை இவ்வளவெ

167138



ன உணர்ந்தும் குறைந்தது ஒருபத்திரிக்கையாவது தருவித்து அதனுடைய பிரயோஜனத்தை அடையாதவர்கள் பிணி மூப்பு சாக்காட்டை நீக்கக்கூடிய அமுதத்தை உண்ணாது வெறுத்தவர்களுக்குச் சமானமானவர்களென்றே கூறலாம். பத்திரிக்கைகள் எவ்வளவுக்கவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு மேற்கூறிய பல நன்மைகளையும் பெற்று நமது இந்தியாவானது உன்னதநிலைக்கு வருமென்பது நிச்சயம்.

ஆகையால் நம்தேசத்திலுள்ள கல்வியிற் சிறந்த ஒவ்வொருதனவானும் இப்பத்திரிக்கையையும் இனிவெளிவரும்பத்திரிக்கைகளையும் ஆதரித்து அதனாலுண்டாகும் பெரும்பயனைதாங்கள அனுபவிப்பதுடன் நமது இந்திய சகோதரர்களையும் அனுபவிக்குமாறு செய்து முன்னுக்குக் கொண்டுவரும் புண்ணியத்தை அடைந்து இப்பத்திராதிபரைக் களிப்படுத்துவீர்களென்று நம்புகின்றனன்.

கனவான்களே! ஒவ்வொருவரும்தத்தம் தாய்பாஷையை விருத்திசெய்யவேண்டியது முதற்கடமையாயிருப்பினும் நமதுநாட்டிலுள்ள வைஸ்யகுலாபிமானிகள் அநேகமாய் ஆந்திர பாஷையாகிய நமது தாய்பாஷையை விருத்தி செய்யாமலிருப்பதினும் சுலபமாய்ப்படித்த சிலர் பத்திரிக்கைகளிலுள்ள விஷயங்களைப்படித்துத் தெரிந்துக்கொள்ள சக்தியற்றவர்களாய் இருப்பதினாலும் தக்ஷணதேசமாகிய இந்நாட்டில் அநேகமாய்த் தமிழ் வியாபித்திருப்பதினாலும் இப்பத்திரிக்கையைத்தமிழில்பிரசுரிக்கலாயினேன்

செப்பனிடுவர் பெயர்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
செப்பனிட்டு முடித்த நாள்
சரிபார்க்கும் மே.பா.எ. கையொப்பம்.
உதவியாளர் கையொப்பம்.
23/3/94

# மகன் மனைவி இருக்கவேண்டிய முறைகள்.

## மகன் இருத்தற்குரிய கிரமமாவது.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"

என்னும் முதுமொழிகளைக் கைபிடித்துப் பெற்றோர்சொல்லைக் கேட்டுத் தவறுதியற்றி அவர்மனமகிழ ஒழுகுவதுதான் இப்புதல்வனை நற்புதல்வனாவான். தாய் தந்தையர் உயிரோடிருக்கும்போது அவர்வார்த்தைகளுக்குக் குறுக்குச்சொல்லாது அவற்றின்படி நடந்து அவர் இறந்தபின் வருஷச்சடங்கிற்பூரிபோசனம் அளித்துறையிற் பிண்டதானஞ்செய்பவனே புத்திரனென்றுசொல்லப்படுவானும் புத் என்னும் நரகத்தினின்றும் பெற்றோரைவிடுவிப்பவனே புத்திரனதலாலும் அவ்வாறொழுகித் தன் மாதா பிதாக்களை நற்கதிக்கு உய்ப்பவனே நன் மகனாவான்; அன்றி தந்தைதாயரைப் பேணி அவரைப் பெருமைப்படுத்தாமல் என்னை வருந்தித் தவஞ்செய்து பெற்றோரே! என்று அன்னோரைச்சிறுமைப்படுத்தித் தீயொழுக்கங்கொண்ட பிள்ளையும் பிள்ளையோ பெற்றோர்க்குப் பெரும்பிணியன்றோ

மனைவியிருக்கவேண்டிய முறையாவது:—கணவன் சொல்லை வேதவாக்கியமாகக்கொண்டு அவன்மனங்கோணாமல் அவனது உள்ளமுவக்குமாறு ஒழுகுதலேயாம். பதிவிரதையொருத்தியை மனைவியாகக்கொண்ட ஒருவன் பெரியவரொருவரைத் தன்னகத்தில் உணவுக்கழைத்து தனக்குக்காலையில் வெளியே கிராமகாரியநிமித்தம் போகநேரிட்டமையாற் பெரியவருடன் வருவதைத் தன் மனையாளுக்கறிவித்துச் சமையல் முதலிய காரியங்களைச்செய்து சித்தப்படுத்தி வைக்கும்படி சொல்லிவிட்டுப்புறப்பட்டுப் போய்த் தன் வேலைகளை முடித்துக்கொண்டு பதினைந்து நாழிகைக்கு மீண்டு வீடு வந்துசேர்ந்தபோது, தன் இல்லாள் இடைகழித்திண்ணையில் முன்றானையை விரித்து



தன்கையைத் தலையணையாகக் கொண்டு கும்பகர்ணனை வெல்லக்கருதிப் படுத்திருக்கக்கண்டு, 'ஐயோபாவம்! வேலைசெய்து இளைப்பாறப் படுத்துத் தூங்கிவிட்டாள்' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு உட்புகுந்தான். அங்கே முற்றம் தாழ்வாரமெல்லாம் வைக்கோலும் சாணியுமாகி மெழுகிப்பெருக்கப்படாமலிருப்பதைக்கண்டு, இன்று அதிகவேலையைத்தனியாகச் செய்ய நேர்ந்தமையின் மற்ற வேலைகளைப்பார்ப்பதற்கு அவகாசமில்லைபோலும்; ஆயினும் பாதகமில்லை, என்று மடைப்பள்ளியிற் புகுந்தபோது எச்சில் காலில் மிதிபடப்பார்த்து 'சிறுபெண்ணாகையின் இத்தனைநேரம் எவ்வாறு பசிபொறுத்திருப்பாள்! பழஞ்சோறுண்டாள் போலும்; பூசைசெய்துவிட்டு அவளை எழுப்புவோம், என்று நீராடி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பூஜிக்கத்தொடங்கி, சமைத்தபதார்த்தங்களை நைவேத்தியத்திற்கு ஸ்வாமியின் திருமுன்னர்க் கொணர்ந்து வைத்துக்கொள்ளுதற் பொருட்டுச்சென்று அடுப்பின் உள்ளேயிருந்து ஒரு பூனைக்குட்டி எழுந்தோட, அங்கே ஒன்றுமில்லாதிருக்கக்கண்டு மிக்க சீற்றத்தோடு மனைவியிடம் வந்து, 'அடி, பாவி! நீ ஏன் சமைக்கவில்லை?' என்று கேட்க, அவள் 'உங்களப்பந்தான் பாவியாக; நானேன்பாவியாவேன்?' என்ன, அவன் 'அடி, முண்டை! அவர்மிக நல்லவர்; அவர்திறத்தில் அபசாரப்படாதே; என்ன, அவள், உங்கள் ஆய் முண்டை; உங்கள் அக்காள், தங்கைகள் முண்டைகளாகுக; நானேன் முண்டையாவேன்? என்று கூற, அவன் சினந்து 'என் வீட்டிலிராமல் ஓடிப்போ, என்று தெழித்துரைக்க, அவள், 'உனக்கேதுவீடு? பானைபிடித்தவள் பாக்கியம், என்றபடி நான் வந்த பிறகு தானே வீடும் மாடும் மற்ற வளங்களும் பெருகின, எனக்குத்தான் இல்லாள் எனவும் மனைவியெனவும் பேர். நீரே ஓடிப்போம்." என்று அஞ்சாமல் எதிர்மொழியைக்கேட்ட அவன் யாதும் செய்யவல்லனல்லனாகி, 'ஏ! கருணாநிதே! என்னைக்கொண்டு போகாயோ!' என இரங்கி வருந்தியுரைக்க, அவ்வடங்காப்பிடாரி 'நீ போ

ஞற்சனியன் தொலைந்தது என்று வேங்கைபோல் எரியெழ விழித்துக் கணவனென்றெண்ணுமல் அவனை இழித்துரைத்தாள். இப்படிப்பட்ட பெண்கள் செயலை நினைத்தன்றோ.

"பேய்கொண்டாலும் கொள்ளலாம்,
பெண் கொள்ளலாகாதே."

என்று கூறினர். இவ்வாறின்றிக் கொழுநனைப்போற்றி, அவனிடம் பக்தியும், கற்புநிலை தவறாமையும், வாய்மையுடைமையும் மேற்கொண்டவளே நன்மனைவியாவாள் என்று நூல்கள் சொல்லுகின்றன.

வணிகரியல்பு—

"கொண்டபடி போதும் விலை பேசிலாபஞ்சிறிது,
கூடிவர நயமுரைப்பார்.
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வராதபடி,
குறுகவே செலவுசெய்வார்
வண்டப்புரட்டர் தாமறிந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீய்க்கிடார்.
மருவு நாணயமுள்ளோர் கேட்டனுப்புகினுமவர்,
வார்த்தையிலெல்லாங்கொடுப்பார்.
கண்டெழுது பற்று வரவினின் மயிர்பிளந்தே,
கணக்கிலணு வாகிலும்விடார்.
காசு வீணில் செலவிடார் சிதமானதிற்,
கனதிரவியங்கள் விடுவார்.
மண்டலத் தூடு வர்த்தகஞ் செய்கின்ற,
வணிகர்க்கு முறைமை யிதுகாண்.
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு,
மலைமேவு குமரேசனே."

என்று குருபாததாசர் தாமருளிச் செய்த திருப்புல்வயல் குமரேச சதகத்தில் கூறியிருக்கிறார். நால்வகைவருணத்தாருள் மூன்றாவது வருணத்தாராகிய வைசியஜாதியார்க்கு உரிய தன்மையை நன்றாய் விவரித்து இவர் சொல்லியிருக்கிறார்.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்பேணிப், பிறவுந்தம் போற்செயின்" என்ற திருக்குறளினாலும், பிறர் பொருளையுந் தம்பொருள் போலெண்ணிக் கொள்வது மிகையுங்கொடுப்பது



குறையும் ஆகாமல் ஒப்பநாடி வாணிகஞ்செய்தலே நல்லவாணிகமாமென்று அறிக. தாம்வாங்கிய விலையையுள்ளபடி கூறி அதற்குமேல் இவ்வளவு இலாபம் தரவேண்டுமென்று சொற்பலாபத்தைக் குறிப்பிட்டுக் கேட்டாலும், அங்ஙனமன்றித் தாம் கொண்ட விலையோடு சொற்பலாபத்தையும் கூட்டியே விலை கூறுதலும் ஆகிய இருவகையும் இங்கு அடங்கும்.

"ஆன்முதலிலதிகஞ் செலவானால்,
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை,
எல்லார்க்கும் பொய்யனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லானு நாடு"

என்று ஒளவையாரும் சொல்லியிருக்கிறபடியால், அளவுக்கு மிகுதியாய்ச் செலவுசெய்தல் பெருங்குற்றமேயாகும். வஞ்சகமுள்ள துஷ்டர்கள், பொய்பேசுபவர், வாக்குநாணயமில்லாதவர், வயிறுடம்பம் பண்ணுபவர், இன்னும் இதர மோசக்காரர்கள் பத்திரம் எழுதிக்கொடுத்து பொன்னை அடமானமாக வைத்தாலும் வைசியர் கடன் கொடுக்கவே மாட்டார்கள். நாணயமுள்ளவர், சொன்ன சொல் தவறாது நடப்பவர்கள் ஏதாவது வேண்டியிருந்து தம் வேலையாட்களை யனுப்பித்தாலும் அவர் வார்த்தையில், அவ்வருந்தத்தார் வேண்டியவற்றையெல்லாங் கொடுத்தனுப்புவார்கள் பற்று வரவு முதலிய கணக்குகளை அதிநுட்பமாக அவர்கள் எழுதுவார்கள். ஒரு பைசாகூட விடாமல் கணக்கு எழுதுவார்கள். இப்படி ஜாக்கிரதையில்லாமலிருந்தால் வியாபாரஞ் சரிவராது. ஒரு காசுகூட வீணாகச் செலவு செய்யார். பயனுள்ள விஷயங்களில் ஏராளமான பொருளை உபயோகிப்பார். இப்பூமண்டலத்தில் வர்த்தகத் தொழிலைக் கொண்ட வைசிய ஜாதியர்க்குரிய லட்சணங்களில் இவை முக்கியமானவை. இவற்றைகவனித்து வரவேண்டியது வைசியர்களில் ஒவ்வொருவருடைய கடமையாகும். நூற்றறுபது வருஷங்களுக்கு முன்பு வசித்திருந்த குருபாததாசர் புகழ்ந்து கூறிய இக்குணாதிசயங்களை வைசியர்களெல்லோரும் பல்லாண்டு பல்லாண்டு கைப்பற்றி வருவார்களாக.

இ. ஸ்ரீராமுலு.

# Arya Vysia Students Assoceation Shevapet Salem.

சேலம் வைஸ்யமானவர்களெல்லோரும் ஒன்று கூடி "வைஸ்ய வித்தியார்திகளின் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை 1914-ஆம் அக்டோபர்-மீ ஸ்தாபித்திருக்கிறார்கள். இச்சங்கத்திற்கு சேலம் வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ. **T. K.** பாலகிருஷ்ண செட்டியார் **B.A., B.L.,** அக்கிராசனாதிபதியாக இருக்கிறார். மகா-ா-ா-ஸ்ரீ. **M. V.** கோபால காரிய தரிசியாக இருந்து வருகிறார். பிரதி ஞாயிற்றுக்கிழமை இச்சபைகூடி வருகிறது. வைஸ்ய மாணவர்களை மாத்திரம் மெம்பர்களாக சேர்த்துக் கொள்ளப்படும் மூன்றாவது பாரத்திலும் (**Third Form**) அதற்கு மேல்வகுப்புகளில் வாசிக்கிறவர்கள் மாத்திரம் மெம்பராகச்சேரலாம். ஒவ்வொரு மெம்பரும் பிரதிமாசமும் 4 அணா சந்தாகட்ட வேண்டும். இச்சங்கத்தில் ஒரு புத்தகசாலை (**Library**) இருக்கின்றது. அதில் தெலுங்கு, தமிழ்; இங்கிலீஷ் பாஷைகளில் அநேகபுத்தகங்களிருக்கின்றன. பிறகு ஞாயிற்றுக் கிழமையும் உபந்நியாஸமும், (**Ricetation**) ஓதுகைகளும் நடக்கின்றன தமிழ், இங்கிலீஷ் மாதாந்திரப் பத்திரிக்கைகள் அநேகமாக வருகின்றன. இச்சபையினால் வைஸ்ய மாணாக்கர்களுக்கு அநேக நன்மைகள் உண்டு. இப்பேர்ப்பட்ட மாணவர் சபைகளை நம் வைஸ்ய சகோதரர்கள் ஆங்காங்கு ஸ்தாபித்து வந்தால் வைஸ்யர்களின் கல்வி அபிவிருத்தியாகுமென்பதற்குத் தடையில்லை.

M. V. Sopal.



# Arya Vysja Sradntes Assoceation.

சென்ற 1914-ஆம் டிசம்பர்-மீ 25-உ சனிக்கிழமை சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ. ஸல்லா குருசாமி செட்டியார் பி.ஏ., பி.எல்., அவருடைய மேல்மாடியாகிய "குருவிலாசம்" என்ற ஸ்தலத்தில், நமது ஆரியவைஸ்ய வக்கீல்கள், பி.ஏ., எம்.ஏ., பட்ட பரிக்ஷைகளில் தேறினவர்கள், எப்.ஏ., வகுப்பு வைஸ்ய மாணாக்கர்கள் முதலானவர்கள் ஒரு சபை கூடினர். காலை பத்துமணிக்கு வந்தவர்களுக்கு மகா-ா-ா-ஸ்ரீ. ஸல்லா குருசாமி செட்டியார் விருந்தளித்தனர். பிறகு "ஆர்ய வைஸ்யர் பி.ஏ, பட்டங்களைப் பெற்றவர்களின் சங்கத்தைப் புதிதாக ஸ்தாபிக்கும் பொருட்டு பகல் 1 மணிக்கு எல்லோரும் கூடினார்கள் அவர்கள் கூடியிருந்த இடம் அநேகச்சித்திரப்படங்களாலும், கண்ணாடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது அங்கிருந்தவர்களின் மனம் ஒரு விதமான சந்தோஷத்தை அடைந்தது. வடக்கே கஞ்சம், விசாகப்பட்டணம், குண்டூர் முதலிய இடங்களிலிருந்தும், மேற்கே கடப்பை, பல்லாரி, மைசூர் முதலிய ஸ்தலங்களிலிருந்தும், தெற்கேகோயமுத்தூர், சேலம் முதலிய இடங்களிலிருந்தும், சென்னப்பட்டணத்திலிருந்தும் அநேக வைஸ்ய கனவான்களும் வந்திருந்தனர். அவ்வளவு வைஸ்ய சகோதரர்களை ஒரே இடத்தில் பார்க்க மிகவும் சந்தோஷகரமாயிருந்தது. அங்கு வந்தவர்களில் முக்கியமான பிரபுக்கள் யாவரெனில்,

1. பெங்களூர் மகா-ா-ா-ஸ்ரீ. கெங்கய்ய செட்டியார் (அக்கிராசனாதிபர்).
2. சென்னப்பட்டணம் ஸல்லா குருசாமி செட்டியார் (காரியதரிசி).
3. சென்னப்பட்டணம் கோபாலசாமி செட்டியார்.

4. கோயமுத்தூர் வக்கீல் [illegible] செட்டியார்.

5. சேலம் வக்கீல் **T. K.** பாலகிருஷ்ண செட்டியார்.

6. மைசூர் **S. V.** செட்டியார்.

7. திருப்பூர் வக்கில் **M. K.** சுந்தரம் செட்டியார்.

இச்சபைக்கு வேண்டிய ஒழுங்குகளை இருந்தவர்க[illegible]ரும் அங்கீகரித்தனர். அவை பின் வருமாறு

(1) இந்த சபை வித்யாபட்டம் பெற்ற ஆர்ய வைஸ்ய பஹா சபையென்று கூறப்படும்.

(2) இச்சபையில் சேர விரும்பும் வைஸ்ய கனவான்கள் பி. ஏ. பட்ட பரீக்ஷையில் பட்டம் பெற்றிருக்கவேண்டும்.

(3) ஒவ்வொரு மெம்பரும் வருஷத்திற்கு ஆறு ரூபாய் வருடச்சந்தா பிரதிவருடமும் கட்டவேண்டும். முன்னூறு ரூபாய் ஒரே தொகையாக கட்டுகிறவர்கள் வருடச்சந்தா கொடுக்காமல் தம்ஜீவகாலமுழுவதும் மெம்பராக இருக்கலாம்.

(4) இப்படி வசூலாகும் தொகையை சென்னையில் ஒரு பாங்கி வைத்து அதன் வரும்படியை ஏழை வைஸ்ய மாணாக்கர்களுக்கும் படிக்க சம்பளம் கொடுத்தும் இன்னும் இப்படிப்பட்ட நல்ல விஷயங்களில் செலவிடப்படும்.

(5) மெட்றிகுலேஷன், எப், ஏ, வகுப்புகளில் வாசிப்பவர் (Association) தோழர்களாக இச்சபையில் சேரலாம். இவர்கள் வருஷம் மூன்று ரூபாய் சந்தா கொடுக்கவேண்டும்.



(6) இச்சபை வருடத்திற்கு ஒருமுறை டிசம்பர் மாதத்தில் சபைகூடும்.

(7) இச்சபையின் முக்கிய கருத்துகள் என்னவெனில்.

(1) பலவிடங்களிலிருக்கும் வைஸ்ய பிரபுக்கள் வருடத்திற்கு ஒருமுறை இங்கு வந்து தாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவேண்டும். (2) இப்படி அறிந்துகொண்டு தங்கள் சகோதர பாவத்தை விருத்தி செய்தல் (3) வைஸ்யர்கள் கல்வி அபிவிருத்தி செய்தல், வைஸ்ய ஏற்பாடுகள் செய்தல். (4) ஆர்ய வைஸ்ய மஹா சபைகளில் நிர்மாணிக்கப்பட்ட விஷயங்களை வழக்கத்திற்குக் கொண்டுவருதல் முதலான விஷயங்களைதான் முக்கியமானவை.

2. சில கனவான்கள் உபந்நியாசங்களைச் செய்தனர். அவர்களெல்லோரும் இச்சபை ஏற்படுத்தினது முக்கியமாய் வைஸ்யர்களுக்கு இன்றியமையாததென்றும், இது சரியாய் நடந்து வந்தால் நமது வைஸ்யர்களின் கல்வி, வியாபாரம், ஒழுக்கம், குணம் முதலியவற்றை அதிகரித்து அவர்களை நல்ல பதவிக்குக்கொண்டு வருமென்பதற்கு ஆக்ஷேபணை இல்லை என்று கூறினர்.

3. ஆம்ஸ்டர்டாமிலிருந்து பின்வரும் அதிசயமான சம்பவம் தெரியவருகிறது:— ஜார்ஜ் லீஸன் என்ற சிறுவன் ஒற்றனாக இருந்து, லீஜ் பட்டணத்தில் பதினேழு வேவுகாரர்களைப்பிடித்து, அவர்களெல்லோரையும் பிரசாக்கினைக்கு உட்படுத்தினான். ஒரு ஹூலனை அவன் கொன்றானாம். ஒரு கையில் வெடியிருந்தும், அவன் மற்றொருவனை பெக்லின் என்ற ஸ்தலத்தில் கைதியாக்கினான். இரண்டு தடவை ஜர்மன் துருப்புப்பட்டாளங்களுக்குள் போய் அங்கு நடக்கும் சங்கதிகளைத்தெரிந்து வந்தானாம். பெல்ஜிய தேசத்தரசர் அவனை அலங்கரித்து, அவனுக்கு பெரிய ஒரு உத்தியோகம் [illegible] த்தனுப்பினான்.

ஆவணக் காப்பக நூலகம்
16994

# விஞ்ஞாபனம்.

*சீரியசற் செந்தமிழால் சேர்ந்து வெளியிட்டேன்*
*"ஆரிய வைசியாபிமானி" யெனும்—பேரியலும்*
*பத்திரிகைப் பாங்காய்ப் பயின்றுவாக்கண்பாரீர்*
*உத்தம குலத்தீர் உவந்து.*

**சகோதரர்காள்!**

குலாபி விர்த்தியையும் தேசாபி விர்த்யையும் கருதியான் வெளியிடத்தொடங்கும் "ஆர்ய வைசியபிமானி" என்னும் இவ்வரிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இனிது நடைபெறுமாறு எல்லாம் வல்ல இறைபவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

குலப்பெயர் பூண்ட இப்பதிரிகை அதற்கேற்ப ஆந்திர பாஷையில் இல்லாக்குரையை நமது நண்பர்கள் குறையாகக்கருதார்களென்றெ நான் நம்புகின்றேன். இச்சென்னை ராஜதானியில் தமிழ் பாஷையுலாவும் ஜில்லாக்கள் பலவாதலினாலும், அவற்றுள் தமிழறிந்த நம் சகோதரர் பெரும்பான்மையோர் என்பது கருதியும், நம்மவர்கேயன்றி ஏனையோர்க்கும் பொதுவாக உபயோகப்படவேண்டும் என்று பிரசுரிக்கின்றேன்.

சென்ற ஜனவரி மீ முதல் தேதியிலேயே நான் இதனை வெளியிடவிருந்தேன். ஆனால் அச்சாபீஸை இருந்த யிடத்திலிருந்தும் வேற்றிடம் மாற்ற வேண்டியிருந்தபடியாலும் எதிர்பாராத மற்றும் பல இடையூறுகளாலும் தடைப்பட்டது. வெகு சீக்கிரத்திலேயே தொடங்கிவிட வேண்டுமென்று என் நண்பர்பலரும் பலகாலும் என்னைத் தூண்டித் தெருவித்துக் கொண்டதன்மேல் யான் நினைத்தவண்ணம். அழகிய டைடில்பேஜ் ஆர்ய சின்ஹங்களுடன் அமைக்க இயலாது போயிற்று. அடுத்த சஞ்சிகையிலிருந்து திராசு. கப்பல். கலப்பை, (க்ருஷி, வாணிபம், கோஸம்ரக்ஷ.) முதலிய ஆர்யசின்ஹங்களுடன் "டைட்டில் பேஜ்" வெகுஅழகாய் அமைத்து குலதிலகர்களது சித்திர விசித்திரங்களுடன் சேர்த்து வெளியிடுவேன்.



தற்காலம் நடந்து வரும் ஐரோப்பிய யுத்த சமாசாரங்கள் ஆங்கிலப் பத்திரிகைகளாலும் தமிழ் தினசரி பத்திரிகைகளாலும் விஸ்தாரமாகத் தெரிகுதலைகளை ஒருவாறு குறைத்து யுத்தக் குறிப்புக்களை மாத்திரம் இதில் தருவேன்.

அவசியமான குலாபி விர்த்திக்குரிய விஷயங்கள், கல்வி, பரோபகாரம், வைஸ்ய லோகத்தில் ஆங்காங்கு நடைபெறும் பல அரிய விஷயங்கள். இன்னும் பல சமாசாரங்கள். முதலியவைகளை என்னால் கூடுமானவரை தொகுத்துப் பிரசுரிக்க முயல்வேன்.

தவிர தமது பிறப்பால் நமது குலத்துக்கோர் பெருமையை அளித்து அநேக ஆசார சீர்திருத்தங்களைச்செய்து, தம்வாழ்நாள் முழுவதையும். வைசிய "லோகத்திற்கேசமர்ப்பித்து வந்தவரும்" 'வார்தா' பத்திரிகைகளை நம்மாந்திர பாஷையாகிய ஆந்திரத்தில் வெளியிட்டுக் கொண்டு வந்தவரும் ஜோதிமயமாயிருந்து இப்போது நம் அஞ்ஞானாந்தகாரங்களை நீக்கிக் கொண்டிருப்பவரும் ஆகிய பகவான்.

ஹோனார் யாஜி ஆத்ம கூரி லக்ஷ்மீ ந்ருசிம்ஹ சோமயாஜி **B. A.,** அவர்கள் பாத பதுமங்களை யான் முதன் முதலில் நமஸ்கரித்து இப்பத்திரிகையைத் தொடங்குகின்றேன். அவரது ஜீவிய சரித்திரத்தையும் இதனுடன் காணலாம் இப்போது யுத்தகாரணமாக காகிதம் விலையுயர்ந்திருந்தும் கூட; நம்குலாபிமானிகள் ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசித்து விர்த்திசெய்யவேண்டுமென்றே இப்பத்திரிகையின் சந்தாவை மிகவும் குறைத்திருக்கின்றேன்.

**சகோதரர்களே**

யான் தொடங்கியுள்ள இவ்வரிய பெரிய விஷயத்தைத் தவறாது தாங்கள் தங்கள் மித்திரர்களுடனும் சந்தாதார்களாகச்சேர்த்து என்னையும் இப்பத்திரிகையும் விர்த்திக்குக்கொண்டுவருமாறு தங்கள் உதவியைப்பெற நான் மிகவும் தங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

பத்திரிகை தொடங்குமாறு அடிக்கடி வற்புறுத்திக்கூறி என்னை உத்ஸாகப்படுத்திவேண்டிய சௌகர்யங்களும் அமைத்துக்கொடுத்த **Madras Bank Shraff.** ஸ்ரீமான் **M. V.** கோபால் செட்டியார் அவர்களுக்கு நான் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்

வி. ஆர். நாகலைய்ய செட்டி,

பத்திராதிபர்.

## காலஞ்சென்ற

## ஆனரபிள் மிஸ்டர் கோகலே அவர்கள் பேரில்.

### இரங்கற்பாக்கள்.

(1) பூமாது கேள்வன் மலரோன் புராரிபுரு கூதனாதி யிமையோர்,
சாமாறெழிக்க வவதார முன்னு தகையிர்ந்து தேயமகளாம்,
சீமாதளித்தபல கோடி செல்வர் செறிதுக்கம் வெயில் முனிமமாய்,
போமாறுதித்த கோபாலகிருஷ்ண புனிதா நிறைந்த புகழோய்.

(2) வேதாவளித்த மனு ஜீவர்தம்மை வினையாலளிக்கு முதல்வன்,
ஆதாரமாக விரிநீர்நிலத்திலவதார முற்ற தெனகம்,
மாதாவயிற்றிலியா றுகோடி மகவிற்சிறந்த மணியாய்
எதாயுதித்த கோபால கிருஷ்ண இறையே யெமாவி திறையே.



(3) மறையோர்குலத்தின் மகவாயுதித்து வளர்ஜீவ கருணையறிவு;
நிறை கல்விபெற்று புகழ் போதராசி நெறிபாகவேல்பி கமிஷன்,
அறைகூவமேவி கரியாங்குணர்த்தி யமிராயசட்ட சபையிற்,
றுறையாயமர்ந்து தேசாபிமான சுடர்வீசிநின்ற சகுணை.

(4) ஆரம்பகல்வி யெவரும்படைக்க வாசாரசட்டமுறவே
நேரம்படைத்து குடியேற்றதேய நெரிகூலியென்னவியகலும்,
வாரந்தடுக்க மிகவேமுயன்று மனமாரகாந்தி யகிபன்,
கோரப்பறித்த கோபாலகிருஷ்ண கோகலேயெனு மகுருவே.

(5) தென்னாப்பிரிக்கா துரைமார் விளைத்ததுயர் சட்டமானமுதலை,
பின்னையிழுக்க வறைகூவு மெங்கள் பெருமாட்டிமக்கள்கரிமுன்,
முன்னாலெழுந்து விடுவித்த வாதி மூலம் மனாந்த முதல்வா,
இன்னாள்பிரிந்த துயர்சேதிகேட்க வெங்கிப்புலம்புமனமே.

(6) தாய்நாடடைந்து சிறுவாழ்வகன்று தனிவாழ்வு கூடவழியாய்,
ஆய்வாலமைந்த ஜாதியசங்கமதிலேயுழன்றுமனமே
நோய்வாயமைந்த நந்தேயமக்கள் நொடிவாற்று முள்ள மதுகொள்.
டோயாதுழைக்க வசங்கர்பசங்க யொருக்கின்று வுறவே.

(7) காலம்படைத்த துயராழி நீங்கிக்கரையேறுந்துணை பதியில்;

யாலம்படைத்த வறாவார் கலங்களடியிற்புகுந்த தெனவே,

சீலம்படைத்த நினைவாளிலேற்றி ஜெகமீதி லெங்கறு யவே,

ஞாலம்படைத்த புகழோருருக்கள் ஜனனித்ததென் னுரைமேவாய்.

இன்னும்வரும்

1915-ஞு. பிப்ரவரி-மீ. 7-உ. சேலம் செவ்வாய்ப்பேட்டை செந்தமிழ்ச் சங்கத்தாரால் கூட்டப்பட்ட அநுதாபக் கூட்டத்தில் சேலம் சுகவனபுரி ஸ்ரீ-மான் S. அர்த்தநாரீச நாயக்வர்மா அவர்களால் எழுதிப்படிக்கப்பட்டது.

## (பங்குனி உத்திர உற்சவ சிறப்பு.)

பாவநாசமென புகழ் பெற்ற இச்சேல நகரின் மேற்கில் பாவடித் தெருவில் சுப்பிரமணியர் ஆலயமொன்றுண்டு இவ்வாலயத்தை விசேஷமாய் கைகோலரே அபிமானித்துள்ளார். இவ்வாலயத்திற்கு முக்கிய உற்சவாதிகளில் பங்குனி உத்திர உற்சவமே சிறப்புடையது. இவ்வாண்டில் நேற்று 30-உ செவ்வாயன்று நடந்த காவடி உற்சவத்தின் சிறப்பை இங்கு சுருக்கமாய் வரைகின்றோம்.

பங்குனி உத்திர மகோற்சவதினமாகிய 30-உ யன்று

காலை பூங் கொத்துகள் அசைகின்ற கற்பகவனஞ்சூழப்பெற்ற தெய்வலோக அரசுரிமையைத்தேவேந்திரனுக்குக்கொடுக்கவும் தேவர்களுடைய வருத்தம் தீரவும், பேய்க்கணங்கள் அசுரர் தலைவர் களுடைய தலைகளை எடுத்துப்பந்து விளையாடவும், முக்கண்படைத்துள்ள மூர்த்தியின் முதல் புதல்வராக அவதரித்த ஸ்ரீ. சுப்பிரமணியக்கடவுள் தமதிருபாரிசமும், வள்ளி, தெய்வயானை, திவ்யாலங்காரியாய் கண்ணையும், கருத்தை



யும், கவர்ந்தக்க விச்சித்திர வேலைப்பாடமைத்த சிவிகையிலே முந்தருளி அஷ்டதச வாத்தியங்கள், மும்மரமாய் முழங்க, கண்களைக்கவரும் காவடிகள் எண்ணிக்கையின்றி முன்வர, காவடியெடுத்தோர் மெய்மறந்து பக்திமேலிட்டு ஆநந்தக்கூத்தாட, ஆநந்தமேலிட்டால் ஜனங்கள் ஹரா-ஹரா சப்தம் ஆரவாரிக்க, அதற்கேற்ற வாத்தியங்கள் முழங்க, மகிழ் கொண்டோர் மலர் சொரிய, ஸ்வாமி புறப்பாடாகி பக்தர்களின் மனைவாசல்தோறும் சென்று தரிசனந்தர, ஜனங்கள் ஜலங்கொண்டு குளிரச்செய்து நைவேத்திய தீபாராதனைகள் புரிய, உல்லாசமாய், ஊர்வலமைந்து மாலை ஹரா-ஹரா வென்ற அரிய சப்தத்துடன் ஆலயமடைந்த அற்புதக்காட்சியை என்னவென செப்பத்தரமன்று.

இக்காட்சியைக் கண்டுகளித்த,

ஸ்ரீபதி S. N. ராஜு,


## படை சங்காரி.

ஐயா,

இந்த படை சங்காரி, மருந்தை ஓர் முறை உபயோகித்துப்பாருங்கள்.

இதை அநேக கனவான்கள் பரீக்ஷை செய்தும், அநேக நற்சாக்ஷி பத்திர மளித்திருக்கிறார்கள். இதன் விலை புட்டி 1-க்கு ... ... ... ... ... 0 4 0

**S. V. சாஸ்திரி அண்கோ,**

**No.** 97/1703 மைண்ரோட்,

செவ்வாய்ப்பேட்டை சேலம்.

પ્રેમજી હરિદાસ

પાન તથા આંબાના કમીશન એજંટ,

સેલમ.


## விளம்பரம்.

இதன் விலை ரூ. 1 8 0.

கனவான்களே! எங்கள் கம்பெனியானது வர்த்தகர்கள், உத்தியோகஸ்தர்களாலும், முதலானவர்களுக்கு முத்திரை சீல்கள், ரப்பர் ஸ்டாம்புகள் முதலானவை செய்து கொடுத்து அவரவர்களிடம் நற்சாக்ஷி ஸர்டிபிகெட்டுகள் பெற்றிருக்கிறோம். வெளியூருக்கும் அநேக அச்சாபீசுகளுக்கும் சித்திரபடங்கள், பிளாக்குகள், ரப்பர் சீல்கள் செய்துகொடுத்துக்கொண்டு வருகிறோம்.

பல ரப்பர் ஸ்டாம்பு கம்பெனியார்கள் கேட்லாக்கில் பிரசுரித்திருப்பது போலின்றி அசுத்தமாகவும், விகாரமாகவும், செய்துக்கொடுத்து நல்ல வேலைக்காரர்களின் பெயரைக்கெடுக்கிறார்கள். அதற்காகவே நாங்கள் கைதேர்ந்த வேலைக்காரர்களை ஏற்படுத்தி சுத்தமாகவும், காலதாமதமின்றி, சுல்ப சார்ஜுக்கு வேண்டுமான சித்திர பிளாக்குகளும், ரப்பர் சீல்களும் செய்துகொடுக்க ஏற்பாடு செய்து இந்தக் கேட்லாக்கை வெளியிட்டோம்.

ரப்பர் ஸ்டாம்புகள் எந்த பாஷையிலும் செய்யப்படும் ஸ்டாம்புடன் இங்கி பாட்டல் பெட்டி இதுகளுடன் அனுப்பப்படும்.

S. V. சாஸ்திரி அண்கோ,
No. 97/1703 மைன்ரோட்,
செவ்வாய்பேட்டை சேலம்,

600 003

# To Let

## ARYA VYSIABHIMANI.

## For God crown & country

This monthly Tamil journal has been Started with the express view to disseminate knowledge on education industrial commercial social and religious among the Arya Vysias in particular and as such I appeal to the generosity of our Vysia brethren to Patronise me in this cause. The low subscription of Rs. 1-4-0 per-annum has been charged so that it may be read by the rich and poor alike. Basing my confidence on the support of our numerously rich and influential Vysias I hope to attain success.

V. R. NAGAMAYYA CHETTY
Editor and Publisher
ARYA VYSIYABHIMANI,
*Shevapet Salem.*